பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை போலவே சமூக ஆர்வலர்களிடமிருந்தும் அந்த நூலகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற பல கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே, விரைவிலே அந்த நூலகம் விரிவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

அடிப்படை வசதிகள்

***4424—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, திருவாதவூரில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, திருவாதவூரில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கிறேன். மதுரை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மதுரையிலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் ஒத்தக்கடை அருகில்

2018 ஜூன் 5]

திருவாதவூர் அமைந்துள்ளது. திருவாதவூரில் அமைந்துள்ள அருள்மிகு திருமறைநாத சுவாமி திருக்கோயிலுக்கு திருவிழா மற்றும் விடுமுறை தினங்களில் மட்டும்தான் அதிகளவில் உள்ளூர் மக்களும், உள்நாட்டுப் பயணிகளும் வருகை தருகின்றனர். திருவாதவூரில் அமையப் பெற்றுள்ள சமயப் புலவர் மாணிக்கவாசகர் நினைவிடத்திற்கு மிகக் குறைந்த அளவிலேயே சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

முற்பகல் 11–00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *இருப்பினும் அந்த இடத்திலே சுற்றுலாத் துறையின் சார்பாக அடிப்படை வசதிகளான சுகாதார வளாகம், குடிநீர் வசதி, வாகனம் நிறுத்துமிடம், விளக்குகள் ஆகியவை போதுமான அளவில் உள்ளன. எனவே, தற்போது திருவாதவூரில் அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறையின்மூலம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மேலூர் தொகுதி, திருவாதவூர், சிவபக்தர் மாணிக்கவாசகர் பிறந்த சிறப்புமிக்க ஊர் ஆகும். இங்கு பிரசித்திபெற்ற பழமைவாய்ந்த சிவன் கோயில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர். முன்னாள் பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள்கூட இந்தக் கோயிலுக்கு

[2018 ஜூன் 5

வந்து சாமி தரிசனம் செய்துவிட்டு சென்றிருக்கிறார்கள். இங்கு சுற்றுலாத் துறை மூலமாக குடிநீர் வசதியும், கழிப்பறை வசதிகளை செய்து கொடுத்தும், தெப்பக்குளத்தை தூர் வாரி அதனைச் சுற்றி paver block தரைத்தளம் அமைத்தும், தேர் செல்லும் பாதைக்கு சிமெண்ட் சாலை அமைத்தும், மாண்புமிகு அம்மா அவர்களின் அன்னதானம் வழங்கும் திட்டத்தின்கீழ் அன்னதானம் வழங்கும் இடத்தில் அன்னதானக்கூடம் அமைத்தும் தர அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடம் ஒரு கோரிக்கை மனுவினை அளித்திருக்கின்றார்கள். அந்த மனுவிலே மதுரை மாவட்டம், அழகர்கோயிலில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல், கலையரங்கம் முன்புறம் paver block அமைத்தல், கிழக்குக் கோட்டை வெளிப்புறம் அழகர் கோயில் உள்சாலை முதல் forest மலைவரை தார்ச் சாலை, வடிகால் அமைத்தல், அழகர்கோயில், கோட்டைவாசல், முத்தாலம்மன் கோயில் முன்புறம் paver block, தடுப்புச் சுவர் அமைத்தல், குறிச்சிப்பட்டி ஊராட்சி, வெள்ளலூர் ஏழைகாத்த அம்மன் கோயிலைச் சுற்றி paver block அமைத்தல் மற்றும் தெப்பக்குளத்தை சீரமைத்தல், சோழவந்தான் தொகுதி, புகழ்பெற்ற குருவித்துறை குருபகவான் கோயிலுக்கு paver block அமைத்தல் போன்ற பணிகளையெல்லாம் செய்ய வேண்டி, கோரிக்கை மனுவினை அளித்திருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு குறிப்பிட்ட இடத்தையும், சுற்றுலாத் தலம் என அறிவிப்பது இல்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு,

2018 ஜூன் 5]

தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, அழகர்கோயிலில் அதிக சுற்றுலாப் பயணிகள் வந்துசெல்லும் தென்திருப்பதி என அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற பெருமாள் கோயிலும், முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான ஆறாவது படைவீடான பழமுதிர்ச் சோலையும், வற்றாத நூபுர கங்கை தீர்த்தம் வழங்கும் ராக்காயி அம்மன் திருக்கோயிலும், காவல் தெய்வம் பதினெட்டாம்படி கருப்பண சுவாமி திருக்கோயிலும், அ.வலையபட்டி கிராமத்திற்குப் பாத்தியப்பட்ட முத்தாலம்மன் திருக்கோயிலும் அமைந்துள்ளன. இங்கு பயணிகள் தங்குவதற்கு விடுதியும், குடிநீர் வசதியும், கழிப்பறை வசதியும் மற்றும் paver block தரைத்தளம் அமைத்தும், பெரியாறு பாசனத்தின் கடைமடைப் பகுதியான வெள்ளலூர் நாடு குறிச்சிப்பட்டியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஏழைகாத்த அம்மன் திருக்கோயிலின் தெப்பக்குளத்தை தூர் வாரி, கோயிலைச் சுற்றி paver block தரைத்தளம் அமைத்தும், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதியும், கொட்டாம்பட்டி ஒன்றியம், பொட்டப்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள வெள்ளிமலை முருகன் கோயிலுக்கு குடிநீர், கழிப்பறை வசதியும், paver block தரைத்தளமும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் திருக்கோயில்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் குறித்ததாகும். சுற்றுலாப்*

பயணிகளின் வருகை, எண்ணிக்கை மற்றும் அவ்விடங்களின் முக்கியத்துவங்களைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அனைத்துக் கோரிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

பேருந்து வசதி

***12526—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கம்மாபுரத்திலிருந்து, ஊ.கொளப்பாக்கம் வழியாக நெய்வேலிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

கம்மாபுரம் ஒன்றியம், கம்மாபுரத்திலிருந்து, பழமலை, கொளப்பாக்கம், அரசகுழி வழியாக நெய்வேலிக்கு பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பழமலைக்கும், அரசகுழிக்கும் இடையேயான தூரம் 4 கி.மீ. ஆகும். அது ஒரு புதிய வழித்தடம் ஆகும். அங்குள்ள சாலை மிகவும் குறுகலாக இருப்பதாலும், அந்த வழித்தடம் தற்போது பேருந்து இயக்குவதற்கு ஏதுவாக இல்லாத காரணத்தாலும், அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS